திரு. மு. அம்பிகாபதி : வருகிறவர்களை எப்படிச் சொல்லி அனுப்புவது ? பேசிக் ' பிரின்சிபிள் '—அனுமதிக்கப்படுவதில்லை என்பதையும் நயமாக எடுத்துச் சொல்லுகிற முறை வேண்டாமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழில் நளினமாகப் பேசுவது எப்படி, வல்லமையாகப் பேசுவது எப்படி என்றெல்லாம் சொல்லிக் கொடுக்கலாம் ; காவலர்கள் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்பதற்குத் தேவையானால் பாடம் கற்றுக்கொடுக்கலாம்.

4. அறிவிப்புகள்.

(அ) மேலவைத் தலைவரிடமிருந்து வந்துள்ள செய்தி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் கீழ்க்கண்ட சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவுகள் திருத்தம் ஏதுமின்றி ஒப்புதல் அளித்துள்ளதாக மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களிடமிருந்து செய்தி வரப் பெற்றுள்ளது :—

1. 1980ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/1980).

2. தமிழ்நாடு 1980ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்ச வரம்பு கட்டுதல்) திருத்தச் சட்ட முனவடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/1980).

3. தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு இந்து சமய அறக் கட்டளைகள் திருத்தம் சிறப்பு விதித்துறைகள் திருத்தச் சட்ட முன்வடிவு சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 20/1980).

(ஆ) மதுரை-காமராஜ் பல்கலைக்கழகப் பேரவை தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மதுரை—காமராஜ் பல்கலைக் கழகப் பேரவையில் (Senate) இச்சட்டப் பேரவையின் சார்பில் உறுப்பினர்களாக இருந்த (1) எஸ். பாலகிருஷ்ணன், (2) வீ. எம். சுப்பிரமணியம், (3) என். தனசேகரன், (4) அ. இரகுமான்கான் ஆகியோரின் பதவிக்காலம் 17—5—1980 ஆம் நாளுடன் முடிவடைவதால், பல்கலைக்கழகப் பேரவையில் ஏற்பட்டுள்ள நான்கு வெற்றிடங்களுக்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் தங்களிலிருந்து நால்வரைத் தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யுமாறு மதுரை-காமராஜ் பல்கலைக்கழகம்